மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு அறிக்கை படிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார், என்ன? சொல்லுங்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியாக இருக்கின்ற எல்லோருமே உண்ணாவிரதம், போராட்டம் என்று அறவழியிலே போராடுவது சகஜம். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள் நேற்று நடத்திய அந்தப் போராட்டத்தை ஒரு நாடகம் என்று சொல்லியிருக்கின்றார். நேற்று ஒரு நாடகம் நடத்தியிருப்பதாக கூறிய அந்த வார்த்தையை மட்டும் தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நாடகம் என்று ஏன் சொல்கிறோம் என்பதையும் அவையில் இருப்பவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்ற வாரம் பேசுகின்றபோது இந்தக் கோரிக்கையை வைத்தார். நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் இது பற்றிய விவரங்களைக் கேட்டார். அது ரிஷிவந்தியம் தொகுதியைச் சார்ந்த இடம். அவர் திருக்கோவிலூருக்குச் செல்வதற்கு வழியில்லை என்று சொன்னார். ஆனால், திருக்கோவிலூருக்கு பைபாஸ் சாலையில் ஒரு மேம்பாலம் அதே தென்பெண்ணையாற்றில் இருக்கின்றது. அதேமாதிரி, தென்பெண்ணையாற்றிலே, திருக்கோவிலூரிலிருந்து அரகண்டநல்லூருக்குச் செல்கின்ற வழியில் இரண்டு கிலோ மீட்டரிலே இன்னொரு பாலமும் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்திலேயும் தரைப் பாலம் இருக்கின்றது. அந்தப் பாலம் தற்பொழுது நல்ல நிலையிலே இருக்கின்றது. இதுகுறித்து அவர் அவையில் சொல்லும்போது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின்மூலம் எதிர்காலத்தில் ஏதாவது செய்யுங்கள் என்றுதான் மாண்புமிகு அமைச்சரிடத்திலேயும் சொல்லியிருந்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார். இதையெல்லாம்

தெரிந்துகொண்டு, ஏதாவது நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்று நினைத்துக் கொண்டு, அதை தான் செய்வதைப்போல் காட்டிக்கொள்ள வேண்டுமென்று நினைத்து போராட்டம் செய்வதுதான், நாடகம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேமாதிரி, அவருடைய தலைவருடைய தொகுதியிலேகூட ஆர்க்கவாடி என்கிற இடத்தில் ஒரு பாலம்; அதிலேயும் இப்படித்தான். உள்ளாட்சித் துறை மூலமாக அந்தப் பணியைச் செய்வதற்கு ஆயத்தம் செய்யும்போது, இவர்கள் அந்த இடத்தில் ஒரு கொடியைக் கட்டி அங்கு ஓர் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஆனால், அந்த ஊர் மக்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டி, பெரிய நிகழ்ச்சியே நடத்தினார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேமாதிரி, பிரம்மகுண்டம் என்ற இடத்திலேயும் பாலத்தைக் கட்டுவதற்கு தயாராகிவிட்டோம். செய்கிறோம் என்று அறிவித்த பின்னர், அந்த இடத்திலே போய் நின்று ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்வது, நாங்கள் சொல்லித்தான் இந்தப் பாலம் வருகிறது என்றெல்லாம் சொன்னார்கள். அந்தப் பாலம் எப்படி வந்தது? யாரால் வந்தது என்று அந்த ஊர் மக்களுக்கெல்லாம் தெரியும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசாலே அந்தப் பாலம் வந்தது என்பதையெல்லாம் அந்தப் பகுதிவாழ் மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த இடத்திலே போய் நிற்க வேண்டியது, ஒரு புகைப்படம் எடுக்க வேண்டியது, கோரிக்கை வைப்பது மாதிரி சொல்வது. அதற்குப் பெயர்தான் நாடகம் என்று குறிப்பிட்டேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதுதான் நடந்தது. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு அந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* இல்லை, அந்தப் பிரச்சினையை மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு இத்துடன் விட்டுவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* வேறு விஷயங்களெல்லாம் பேச வேண்டும், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் விளக்கம்தான் சொல்லிவிட்டாரே. *(குறுக்கீடுகள்)* இல்லை, மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். *(குறுக்கீடுகள்)* அனுமதி, இல்லை, அமைச்சர் விளக்கமாகத்தான் சொல்லியிருக்கிறார்.